# அப்போஸ்தலனாகிய யாக்கோபு எழுதின நிருபம்

நற்கிரியைகளை செய்யவே இரட்சிக்கப்பட்டீர்கள்

# ஆக்கியோன்

- யாக்கோபு தன்னை "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்" என்று அறிமுகப்படுத்துகிறார்.
- புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்னும் பெயருடையவர்கள் நால்வர் உண்டு.

1. செபதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாகிய யாக்கோபு
2. இயேசுவால் அழைக்கப்பட்ட மீனவர் (மத் 4:17-22), பின்பு அப்போஸ்தலராக தெரிவு செய்யப்பட்டவர் (மத் 10:2). ஏரோதால் கிபி 44ல் கொலைசெய்யப்பட்டார்(அப் 12:1-2)
3. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.
4. இவரும் அப்போஸ்தலர்களில் ஒருவர் (மத் 10:3,அப் 1:12) இவரைக் குறித்து வேறு தகவல்கள் இல்லை.
5. அப்போஸ்தலனான யூதாவின் தகப்பன் அப் 1:13
6. இவரைக்குறித்தும் அதிக தகவல் இல்லை
7. இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு
8. பட்டியலில் இவர் பெயர் முதலில் இடம்பெறுவதால் மூத்தவராக இருந்திருக்கலாம் மத் 13:55

ஆரம்பத்தில் இயேசுவை அவர் நம்பவில்லை, இயேசுவையும் அவரது ஊழியத்தையும் கேள்விக்குள்ளாக்கினார் யோவா 7:2-5

# ஆக்கியோன்

1. இயேசு உயிர்த்தெழுந்தபின் தரிசனமான தெரிந்தெடுக்கப்பட்ட தனிநபர்களில் இவரும் ஒருவர் (பார்க்க 1கொலோ 15:7)

2. பவுல் இவரை சபையின் தூண் என்று அழைத்தார் (கலா 2:9)

3. பவுல் புதிய விசுவாசத்திற்குள் வந்த பின்னர் முதல்முறை எருசலேமுக்குச் சென்றபோது யாக்கோபை சந்தித்தார் (கலா 1:19)

4. பவுல் தனது இறுதி எருசலேம் வருகையிலும் அவரை சந்தித்தார் (அப் 21:18)

5. பேதுரு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதும் அவர் அதை யாக்கோபுக்கு அறியத்தரும்படி தமது நண்பர்களை கேட்டுக்கொண்டார் (அப் 12:17)

6. யாக்கோபு எருசலேமின் சபைக்குழுவின் முக்கிய தலைவராக இருந்தார் (அப் 15:13)

7. யாக்கோபு நன்கு அறியப்பட்டவராக இருந்ததால் யூதா தன்னை அறிமுகப் படுத்தும்போது "யாக்கோபின் சகோதரன்" என்று அறிமுகப்படுத்துகிறார் (யூதா 1:1).

8. இவர் கிபி 62ல் இரத்தசாட்சியாக மரித்தார்.

- அதிகாரங்கள் 5
- வசனங்கள் 108

# விசுவாசம் (எதிராக ) கிரியை 2:14-26

- வேத வசனங்கள் மாத்திரமே எழுதப்பட்ட தேவனுடைய வெளிப்பாடுகள் என்று நாம் அறிந்திருக்கிறோம். விசுவாசத்தினால் மாத்திரமே, கிருபையினால் மாத்திரமே, கிறிஸ்துவினால் மாத்திரமே இரட்சிப்புண்டாகும். நாம் தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே வாழ்கிறோம்.
- இதுதான் உண்மையான அறிக்கையானால் "மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்" (2:24) என்று யாக்கோபு சொல்லுவதின் அர்த்தம் என்ன?
- இங்கே இரட்சிப்புக்கு வேறுவழிகள் இருப்பதாக யாக்கோபு சொல்லவில்லை,மாறாக "விசுவாசத்தினால் மாத்திரமே" என்பது என்னவென்று புரியவைக்கிறார்.
- விசுவாசத்திற்கும், கிரியைக்கும் இடையான முரண் அல்ல இந்த நிருபம். மாறாக மெய்யான விசுவாசத்திற்கும் பொய்யான விசுவாசத்திற்கும் இடையே உள்ள முரண்களை சுட்டிக்காட்டுகிறது.
- தேவனை உண்டென்று யார்வேண்டுமானாலும் சொல்லலாம், பிசாசுகளும் சொல்லலாம் (2:19)
- மெய்யான விசுவாசம் நற்கிரியைகளினாலே உண்மையானதென்று விளங்கும். பொய்யான விசுவாசமோ நற்கிரியைகளை காண்பிக்க முடியாததால் செத்தது என்று விளங்கும்.
- பவுல் இரட்சிப்பிற்கு முந்திய கிரியைகள் பற்றிப் அதிகமாக பேசுகிறார். இரட்சிப்பானது நற்கிரியைகளினால் உண்டாவதில்லை என்பதை அவர் கூறுகிறார் (எபே 2:8-9)
- யாக்கோபு இரட்சிப்பிற்கு பிந்திய கிரியைகள் பற்றிப் அதிகமாக பேசுகிறார். இரட்சிப்பானது நற்கிரியைகளில் வெளிப்படும் என்பதை தெளிவுபடுத்துகிறார் (2:18)

# விசுவாசம் (எதிராக ) கிரியை 2:14-26

- விசுவாசம் = இரட்சிப்பு+ கிரியைகள்
- விசுவாசம் + கிரியைகள் ≠ இரட்சிப்பு
- தமது கிரியைகளினாலே கிறிஸ்து நாம் நமக்காக செய்யமுடியாதை செய்து முடித்தார்.
- நாம் விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட்டோம். ஆனால் நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு, விசுவாசம் தனியே இருப்பதில்லை.

# யாக்கோபு நிருபத்தின் முக்கிய பகுதிகள்

- வாழ்த்து 1:1
- உண்மையான மார்க்கம் பாடுகளையும், சோதனைகளையும் சகிக்கும் 1:12-18
- மகிழ்ச்சியோடும்,பொறுமையோடும் (1:2-4)
- தேவன் அருளும் ஞானத்தோடும் (1:5-8)
- சரியான கண்ணோட்டத்தோடும் (1:9-11)
- சோதனையை குறித்த புரிதலோடும் (1:12-15)
- |தகப்பனுடைய நன்மை குறித்த அறிவோடும் (1:16-18)
- உண்மையான மார்க்கம் கேள்வியில் மாத்திரமல்ல செயலிலும் இருக்கும் (1:19-2:26)
- கேட்கிறதற்கு தீவிரமாய் இருக்க வேண்டும் (1:19-20)
- கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல செய்கிறவர்களாயும் இருக்கவேண்டும் (1:21-27)
- தனிப்பட்ட விருப்பத்தை காண்பிக்கக்கூடாது (2:1-13)
- விசுவாசத்தை கிரியையினால் காண்பிக்க வேண்டும் (2:14-26)
- • உண்மையான மார்க்கம் வெறும் பேச்சிலிருக்காது ஞானத்திலிருக்கும் (3:1-18)
- • நாவின் ஆபத்து (3:1-12)
- • பரலோக ஞானத்திற்கும், பூமிக்குரிய ஞானத்திற்கும் உள்ள வித்தியாசம் (3:13-18)
- • உண்மையான மார்க்கம் தாழ்மையை வெளிப்படுத்தி தேவனோடிருக்கும் (4:1-17)
- • தேவனுக்கு விரேதியாய் இருப்பது எப்படி (4:1-7)
- • தேவனிடத்தில் கிட்டிச்சேர்வது எப்படி (4:7-17)
- • உண்மையான மார்க்கம் பொறுமையினாலும், ஜெபத்தினாலும், அன்பினாலும் ஆசீர்வதிக்கப்படும். (5:1-20)
- • ஒடுக்குகிற ஐசுவரியவான்களுக்கு ஐயோ (5:1-6)
- • பொறுமையின் ஆசீர்வாதம் (5:7-12)
- • ஜெபத்தின் ஆசீர்வாதம் (5:13-18)
- • தவறுகிறவன் மேல் அன்பு செய்வதால் உண்டாகும் ஆசீர்வாதம் (5:19-20)